# சைவசித்தாந்த நோக்கில் சிவாத்துவித சைவபாடியம் - ஓர் அறிமுகம்

பொ.சந்திரசேகரம்

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

chandrasegaram3@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கி.பி 15 ம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்தியா முழுவதும் சிறப்புற்றிருந்த சைவசித்தாந்த மரபு இன்று தமிழ்நாட்டிலும், யாழ்ப்பாணத்திலும், மலேசியாவிலும் இன்னும் தமிழர் வாழும் பிரதேசம் எங்கும் சிறப்புற்றிருக்கின்றது. தமிழ்நாட்டில் வளர்ந்த சைவசித்தாந்த மரபுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண சைவசித்தாந்த மரபு தனித்துவமானது என்பதைப் புலப்படுத்துவது ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் போன்றவர்களின் சார்பிலான பங்களிப்புக்கள். வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் இம்மரபின் மூலவராக ஞானப்பிரகாசர் கொள்ளப்படுகின்றார். இவர் மரபில் வந்த ஆறுமுகநாவலரின் முதன்மை மாணாக்கன் காசிவாசி செந்திநாதையர். இம்மகான் காசியில் பத்து வருடங்கள் வடமொழியை முற்றுறக் கற்று, அதன் பயனாக ஸ்ரீ நீலகண்டர் எழுதிய சிவாத்துவித சைவபாடியம் சைவசித்தாந்தத்திற்குப் பேரரணாக இருப்பது கருதி, அந்நூலினை வடமொழியில் இருந்து தமிழிற்கு மொழி பெயர்த்தளித்தார். இந்நூல் சைவசித்தாந்தத்திற்கு பெரிதும் அந்நியமில்லாத சிவாத்துவித சைவமரபைக் கூறுவதுடன், வேதாகமங்களை வேறுபாடு இன்றி சான்று காட்டுகின்றது. வேதாந்தம் எனப்படும் உபநிடதம் மட்டுமன்றி அதன்வழி எழுதப்பட்ட பிரமசூத்திரமும் முப்பொருள் உண்மையை விளக்குவதுடன், பிரமம் என்ற சப்தத்தினால் சிவபெருமான் அறியப்படுகின்றார் என்பதனையும், பிரமசூத்திரத்தில் வியாசரது கருத்து, சகுணப்பிரமமே முடிநிலையானது என்பதும் அந்தச் சகுணப்பிரமம் சக்தியோடு கூடிய சிவபெருமான் என்பதும் ஆகும். அவர் ஏகான்மவாதிகள் கூறுவது போல் நிர்க்குணத் தன்மை உடையவர் அல்லர் சகல வகையான சிறப்புக் குணங்களோடும் கூடிய சகுணத்தன்மை உடையவர் என்பதனையும் எடுத்துக்காட்டுகின்றது. மேலும், ஏகான்மவாதிகள் சிவாத்துவித சைவபாடியத்தில் செய்த இடைச் செருகல்களையும், திரிபுகளையும், நீலகண்டர் சிற்சில இடங்களில் பிரமசூத்திரத்திற்கு மாறுபட பொருள் செய்திருப்பதனையும் செந்திநாதையர் மொழிபெயர்ப்பின் ஊடாக எடுத்துக் காட்டியுள்ளார். பிரமசூத்திரத்திற்கு சங்கரர், இராமானுஜர் போன்றோர் எழுதிய உரைகளில் காலத்தால் முற்பட்டது நீலகண்டரின் உரையே. இதனைப் பின்பற்றியே ஏனையோர் உரைகள் எழுதினர். சங்கரரது பிரமசூத்திர உரை நூலாசிரியரது கருத்தைப் பிரதிபலிக்காது தனது சொந்தக்கருத்தை நூலாசிரியர் கருத்து என உலகை நம்பச் செய்தமையை இது சான்றுகளுடன் காட்டுகின்றது. பிரமசூத்திரத்தின் எண்ணிக்கை 545 ஆக இருக்க சங்கரர் சூத்திரங்கள் சிலவற்றைப் பிளந்தும், சிலவற்றை இயற்றியும் 555 ஆக ஆக்கினார் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. மேலும் பிரமசூத்திரம் சைவ சித்தாந்த மெய்யியலிற்குப் பிரமாண நூலாக அமைகின்ற அதேவேளை சிவாத்துவித சைவபாடியம் சைவசித்தாந்த மெய்யியல் விளக்கத்திற்கு ஆதாரமாக அமைகின்றமையும் விளக்கப்படுகின்றது. இதன்வழி சிவாத்துவித சைவத்திற்கு தமிழக சித்தாந்த அறிஞர்கள் வழங்கியுள்ள இடத்தினையும், சைவசித்தாந்த நோக்கில் சிவாத்துவித சைவபாடியப் பொருள் விளக்கம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனையும், தமிழக சித்தாந்த மரபில் இருந்து வேறுபட்ட வகையில் யாழ்ப்பாண சித்தாந்த மரபின் தனித்துவத்தையும் ஆதாரப்படுத்துவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள் –** வேதாந்தம், சைவசித்தாந்தம், நிர்க்குணப்பிரமம், சகுணப்பிரமம், பரிணாமம்

## 1. ஆய்வு அறிமுகம்

சைவசமயம் சார்பாக உருவாகிய தத்துவக் கொள்கைகள் பலவற்றில் சைவசித்தாந்தம் முக்கியத்துவம் உடையது. சைவசமயத்தின் முடிந்த முடிபான கொள்கையே சைவசித்தாந்தம் (சைவம் + ஸித்தம் + அந்தம்) எனப்பட்டது. இதற்கு ஆதாரமான நூல்கள் வேதம், உபநிடதம், சிவாகமங்கள், இதிகாச புராணங்கள், பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள் என்பனவாகும். இவற்றுள் உபநிடதம் வேதத்தின் இறுதிப்பகுதியில்

அமைந்திருப்பதனால் வேதசிரசு, வேதாந்தம், மறைமுடிபு எனப் பல பொருள்கொள்கின்றது. "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என உமாபதி சிவாசாரியார் சிவப் பிரகாசத்தில் குறிப்பிடுவதில் உள்ள வேதாந்தம், இவ் உப நிடதங்களையே குறிப்பிடுகின்றது.

உபநிடதங்களின் சாராம்சமான அறிவுரை யாது? என்ற வினாவிற்கு விடை தேடும் முயற்சியில் முகிழ்த் ததே வேதாந்த மெய்யியலாகும். உபநிடதங்கள் சிவ பெருமான், ஏகான்மா, நாராயணன் என்போரை நோக்கிய வையாகவும், ஒருமை வாத, இருமை வாத, பன்மை வாத கருத்துடையவையாகவும் இருந்தன. இவ்வாறு வேறுபட்டுக் காணப்படும் போதனைகளின் பிழிசாறான அறிவுரை யாது? என்பதை அறிய ஔடுலோமி, காசக்கிருஷ்ணர், பாதரி, ஜைமினி, கார்ஷ்னாசினி, அஸ்மரத்யக் போன்ற பலர் முயற்சித்தனர். எனினும் இவர்களுக்கு பின்வந்த பாதராயணரின் பிரமசூத்திரம் இம் முயற்சியில் பெருமை பெற்றது. தொல்மரபின்படி பாரதத்தை இயற்றிய வியாசராலே இந்நூல் ஆக்கப்பட்டது. ஆயினும் சங்கரர் பாரதத்துக்கு வியாசர் ஆக்கியோன் என்றும், பிரமசூத்திரத்துக்கு பாதராயணரே ஆக்கியோன் என்றும் குறிப்பிடுகின்றார். இமயமலைப் பகுதியில் இலந்தை (பதரி) மரங்கள் நிறைந்த வனத்தில் ஆசிரமம் அமைத்தபடியால் பாதராயணர் என்று காரணப்பெயர் பெற்றவர் வியாசரே எனப்பலர் கருதுகின்றனர். இவர் பராசர முனிவரின் புத்திரர். கந்தபுராணத்தில் மானிடர் அறிவு சுருங்கிய கலியுகத்திலே, சூத்திரங்களைச் செய்யுமாறு சிவபெருமான் விஷ்ணுவிற்கு அறிவுறுத்த அவரே வியாசராக வந்து பிரமசூத்திரத்தைச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நம் மரபுப்படி பிரமசூத்திரத்திரத்தை எழுதிய பாதராயணரும், வியாசரும் ஒருவர் என்றே கொள்ளவேண்டும். இவரது காலம் கி.மு 200 என்பது நவீன அறிஞர்கள் கருத்தாகும்.

பிரமசூத்திரத்திற்கு வேதாந்த சூத்திரம். பிரம மீமாம்சை, உத்தர மீமாம்சை, சாரீரக மீமாம்சை, சாரீகா சூத்திரம் என்ற பெயர்கள் உள்ளன. இந்நூல் சூத்திர வடிவில் அமைந்திருந்தமையால் சூத்திரப் பொருள் யாது? என்பதை விளங்கிக் கொள்ள முற்பட்டவர்களின் ஆக்கங்கள், இந்தி யத் தத்துவப்பரப்பில் வெவ்வேறான தத்துவக் கொள் கைகள் உருவாக்கம் பெற ஏதுவாயின. இவற்றுள் சங்கரர், இராமானுஜர், மத்துவர், நீலகண்டர் ஆகியோரின் பாடியம் அல்லது உரைகள் குறிப்பிடத்தக்கவை. இவர்களில் சங்கர ரின் உரை பிரமத்தை தனிமுதற் பொருளாகக் கொண்ட அத்வைதம் எனவும், இராமானுஜரதும், மத்துவரதும் உரைகள் நாராயணனைப் பரம்பொருளாகக் கொண்ட வைஷ்ணவ மதத்தை முறையே விசிஷ்டாத்வைதம், துவைதம் எனவும், ஸ்ரீ நீலகண்டரின் உரை சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவமதத்தை சிவாத்துவிதம் எனவும் எடுத்துக்காட்டின.

ஸ்ரீ வேதவியாசர் அருளிய பிரமசூத்திரத்திற்கு ஸ்ரீ நீலகண்டர் அருளிய சிவாத்துவித சைவபாடியம் சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டு சைவசித்தாந்தத்திற்கு பேரரணாய் ஓங்கியது. இது அத்தியாயங்களும், பாதங் களும், அதிகரணங்களும் தம்முள்ளே இயைபுபெறச் சிறப் புற அமையப் பெற்றது. சூத்திரங்களுக்குப் பெரும்பாலும் மாறுபடாது உண்மைப் பொருளை எடுத்துக்காட்டுவது. சைவசித்தாந்த சாஸ்திர தத்துவப் பொருள்களைத் தன்னு ள்ளே கொண்டதுடன், திராவிட வேதங்களாகிய தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்களின் உண்மைப் பொருள்களைத் தன்னுள்ளே விளங்கிக்காட்டும் இயற்கை உடையது. இத்தகைய நூலானது 1907 ஆம் ஆண்டில் காசிவாசி செந்திநாதையரால் வடமொழியில் இருந்து தமிழ்மொழியில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. இந்நூலினை சைவசித்தாந்த நோக்கில் ஆராய்வதன் வழி சித்தாந்தத் தத்துவப் பொருளையும் அதிலிருந்து மாறுபட்ட தத்துவப் பொருளையும் எடுத்துக்காட்டுவதுடன், இச் சிவாத்துவித சைவபாடியத்தின் வழி அதன் மூல நூலான பிரமசூத்திரம் சைவசித்தாந்தத்திற்கு அடிப்படை நூலாக அமைந்திருப்பதை விளக்குவதாகும்.

## 2. ஆய்வு மூலமும் ஆய்வு முறையியலும்

இவ்வாய்வின் முதல்நிலைத் தரவாக காசிவாசி செந்திநாதையர் தமிழில் மொழிபெயர்த்த சிவாத்துவித சைவபாடியம் அமைகின்றது. இரண்டாம் நிலைத் தரவாகச் செந்திநாதையர் எழுதிய சைவ வேதாந்தம், சிவஞான முனிவரின் சிவஞானபாடியம், அருணந்திசிவாசாரியாரின் சிவஞானசித்தியார் சுபக்கம், பரபக்கம் போன்ற நூல் கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், இவ்வாய்வில் ஒப்பியல் ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்படுகின்றன.

### சிவாத்துவித சைவபாடிய நூலமைப்பு

இவ்வாய்வின் முதல்நிலைத் தரவான சிவாத்துவித சைவபாடியம், பிரமசூத்திரத்தின் அமைப்பிற்கேற்ப விளக்கப்பட்டுள்ளது. பிரமசூத்திரம் நான்கு அத்தியாயங் களையும், ஐந்நூற்று நாற்பத்தைந்து சூத்திரங்களையும், பதினாறு பாதங்களையும், நூற்றி எண்பத்தியொரு அதிகர ணங்களையும் கொண்டது. சூத்திரம் ஒவ்வொன்றும் சிலவாகிய சொற்களால் இயன்றது பெரும்பான்மை

சூத்திரங்கள் 3 அல்லது 4 சொற்களைக் கொண்டது. சமன்வயம், அவிரோதம், சாதனம், பலன் (பயன்) என்ற நான்கு பகுதிகளைக் கொண்டது. பிரமசூத்திரத்துடன் ஒப்பிட்டு நோக்கத்தக்க நூல் சிவஞானபோதம். இது பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டு பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என அமைந் திருக்கின்றது. இரண்டு நூல்களினதும் இறுதி இரண்டு இயல்களும் ஒரே வகையில் அமைந்துள்ளன.

பூர்வபட்சம், சித்தாந்தம், ஆட்சேபம், உத்தரம், சமா தானம் என்ற முறையில் நூலானது வாத முறையில் அமைக்கப்பட்டுள்ளது. பூர்வபட்சம் என்பது பிறதத்துவக் கொள்கையைக் (பரபக்கம்) கூறுவதாகவும், சித்தாந்தம் அதனது குறைபாடுகளை சான்றுகள் அடிப்படையில் மறுத்து தன்சமயக் கொள்கையை நிறுவுவதாகவும் உள்ளது. சித்தாந்தத்தில் கூறப்படும் விடயங்களுக்கு சில வேளைகளில் ஆட்சேபம் எழுப்பப்பட்டு அதற்கு உத்தரம் (விடை) கூறுவதாகவும், சில வேளைகளில் சமாதானம் கூறுவதாகவும் உள்ளது. இவை யாவும் தருக்கம், பிரமா ணம் என்பவற்றின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.

சிவாத்துவித சைவபாடியத்தின் மொழிபெயர்ப்பினை வலுச்சேர்க்கும் வகையில் செந்திநாதையர் உபநிடத உபக்கிரமணிகை, பிரமசூத்திர உபக்கிரமணிகை என்ற இரண்டு முன்னுரைகளை எழுதியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இரண்டும் 455 பிரிவுகளைக் கொண்டவை. இதில் உபநிடத உபக்கிரமணிகை மட்டும் 375 பிரிவைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவாத்துவித சைவபாடியம் சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகியோரின் பாஷ்யங்களுக்கு மிக முற்பட்ட பழைய பாஷ்யம் எனவும், சங்கரர் முதலானோர் நீலகண்டரது பாடியத்தைப் பார்த்தே தமது பாடியத்தை வரைந்ததோடு மட்டுமன்றி, பிரமசூத்திரத்தில் சூத்திரங்களைப் பிளந்து ஏகான்ம வாதக் கருத்தை புகுத்தியது போல இப்பாடியத்திலும் இடைச் செருகல்களைப் புகுத்தியுள்ளனர் எனவும் செந்தி நாதையர் குறிப்பிடுகின்றார்.

## நூலாசிரியரும் காலமும்

பரதகண்டத்திலே உருவாகிய ஆமர்த்தக, புஷ்பகிரி, கோளகி, இரணபத்திரம் முதலிய மடங்களுக்கு அதிபதிகளா யிருந்த சிவத்துவிஜர் எனப்படும் சிவாசாரியார் வகுப்பைச் சேர்ந்தவர் பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம் செய்த ஸ்ரீ நீலகண்டசிவாசாரியார். இவர் ஸ்ரீ கண்டர் எனவும் குறிக்கப்பட்டார். அது போல இவரது பாடியமும் ஸ்ரீ கண்ட பாடியம் எனவும் நீலகண்டபாடியம் எனவும் அழைக் கப்பட்டது. இவரது குரு சுவேதாசிரியர். இவர் பிறந்த இடம் காலம் என்பன சரியாக அறியப்படவில்லை. எனினும் கோகர்ணத்தில் ஏகன்மவாதியரோடு வாதம் செய்தனர் என்று சங்கர திக்விஜயத்தில் கூறப்படுகின்றது.

இராமானுஜருக்குப் பிற்பட்டவர் நீலகண்ட சிவாசாரியார் என்றும், அதனால்தான் நீலகண்ட சிவாசாரியார் பாடியத்தின் ஆரம்பத்தில் ஐந்தாம் சுலோகத்திலும், பாசுபதிய திகரணத்து (2:238) 38 ஆஞ் சூத்திர பாடியத்திலும் "பூர்வாசாரியார்" எனக் குறித்தது இராமானுஜரையும், சங்கராசாரியாரையும் என வைணவரும், ஏகான்மவாதி யரும் எழுதியுள்ளனர். அது பொருந்தாது "பூர்வாசிரியர்" எனப்பட்டவர்கள் சங்கரருக்கு முற்பட்ட ஏகான்மவாதிகளைக் குறிக்கும் என்றே செந்திநாதையர் கருதுகின்றார். மேலும் பல அகச்சான்றுகளின் அடிப்படையில் சங்கரா் முதலிய வர்களுக்கு முற்பட்டவர் ஸ்ரீ நீலகண்டர் என நிறுவியுள்ளார்.

கி.பி 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கருதப்படும் உமாபதிசிவாசாரியார் ஸ்ரீ கண்ட பாடியத்தின் நூலாசிரியர் நீலகண்டர் என்று குறிப்பிடுகின்றார். அப்பைய தீட்சிதர் சிவாத்துவித நிர்ணயம் என்ற நூலில் ஸ்ரீகண்ட பாடியம் சங்கர பாடியத்துக்கு முற்பட்டதெனக் கூறுகின்றார். சூரியநாராயண சாஸ்திரிகளின் கருத்துப்படி ஸ்ரீ நீலகண்டர் இராமானுஜரது காலமாகிய 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். எனினும் காசிவாசி செந்திநாதையர் தரும் அகச்சான்றின் அடிப்படையிலும் மற்றும் ஸ்ரீ நீல கண்டரது சிவாத்துவித சைவபாடியமும், இராமானுஜரது பாடியமும் அடிப்படையில் விசிட்டாத்வைத மெய்யியலைப் பேசுவ தனாலும், இரண்டு பாஷ்யங்களும் மிக நெருக்கமான தொடர்பு இருப்பதனாலும் இருவரது காலமும் ஒரே காலமாக இருக்கமுடியாது என்பது திட்டமானது. இனி சங்கரர் ஸ்ரீ கண்டரைத் தோற்கடித்ததாகக் கூறப்படும் சங்கர திக்விஜ யத்தின் கருத்துப்படியும், நீலகண்டர் சங்கரருக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என நாம் கொள்ளலாம். ஆயினும் சங்கரதிக்விஜயம் காலத்தால் மிகவும் பிற்பட்ட நூல் சங்கரர் பற்றிய செவிவழிச் செய்திகளைக் கொண்டிருப்பதால் அதனையும் நாம் ஒரு வலுவான சான்றாகக் கொள்வதில் இடர்பாடு உள்ளது. எவ்வாறாயினும் சைவமரபுப்படி நீலகண்ட சிவாசாரியார் சங்கரருக்கு முற்பட்டவர் எனக் கருதலாம்.

## சிவாத்துவித சைவம்

ஸ்ரீ நீலகண்டரால் நிலைநிறுத்தப்பட்ட சிவாத்துவித சைவமானது சிவஞானமுனிவரின் இருபத்திநான்கு சமயப்பிரிவில் சைவசித்தாந்தத்துக்கு மிக அண்மித்ததாக

உள்ளது. புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்ற நான்கு சமயப்பிரிவில் அகச்சமயப்பிரிவில் பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுரஅவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன அடங்குகின்றன. சிவாத்துவித சைவம் நிமித்தக்காரணமாகிய இறைவனது சிற்சத்திக்கு பரிணாமம் கூறுவதனால் இது நிமித்தக்காரண பரிணாமவாத சைவம் எனவும் அழைக்கப்படுகின்றது. சிவப்பிரகாசத்து தொண்ணூற்றொன்பதாவது பாடலில் ''நிலவுலோ காய ஆதி நிகழ்சிவத்துவிதாந்தத்துக் குலவினர அளவளவாக கொள்கையதாகி'' என வரும் இடத்தில் சுத்த சைவம் போன்றது சிவாத்துவித சைவம் எனக் கருதப்படுகின்றது. சிவப்பிரகாசத்தில் ''புறச்சமயத்தவர்க்கு இருளாய் அகச்சமயத்தவர்க்கு ஒளியாய்'' என வரும் இடத்தில் அகச்சமயத்தவரால் அறியப்படுவதாய் உள்ளது சித்தாந்த அத்துவிதக் கொள்கை. இதற்கு அளவுகோல் திருவருட்பயனில் ''ஏகன் அநேகன் இருள் கருமம், மாயை இரண்டு ஆக ஆறாதியில்'' என வருமிடத்தில்; இதில் வரும் ஆறு பொருள்களையும் உண்டு எனக் கொண்டவர்கள் அகச்சமயத்தவர்கள். எனினும் முத்திநிலை பற்றிய விடயத்திலும் மேலும் சிற்சில இடங்களிலும் மாறுபடுபவர்களாகையால் இவர்கள் சிவஞானமுனிவரால் அகச்சமயத்தினுள் வைக்கப்பட்டனர். இவ்வகையில் சிவாத்துவித சைவர் சிவசத்திக்கு பரிணாமம் கூறுதல், இறைவனை உலகிற்கு முதற்காரணமாகவும், நிமித்த காரணமாகவும் கூறுதல், முத்திநிலையில் ஆன்மா என்றொரு பொருள் இல்லையாகி சிவமாகிவிடும் என்ற கருத்து போன்றன சைவசித்தாந்தக் கொள்கையில் இருந்து மாறுபடுவது குறிப்பிடத்தக்கது. இதனால் உண்மைச் சைவசித்தாந்த மரபுக்கும், பாதராயண வியாசருக்கும் மாறாக எங்கெங்கு நீலகண்டர் எழுதினாரோ அல்லது ஏகான்மவாதிகள் எங்கெங்கு இடைச்செருகல் புகுத்தினர் எனக் கருதினாரோ அவைகளைத் தெரிந்தெடுத்து, நேர்மையோடு அடிக்குறிப்பிட்டு மூல ஆசிரியர் கருத்துக்கு மாறுபாடாக உரையாசிரியர் எழுதியபடியால் இப்பகுதியை மொழிபெயர்க்காது விடுகிறேன் எனச் செந்திநாதையர் குறித்துள்ளார்.

### சிவாத்துவித சைவபாடியமும் சைவசித்தாந்தமும்

சிவாத்துவித சைவபாடிய மொழிபெயர்ப்பின் வழி செந்தி நாதையர் பின்வரும் விடயங்களை தத்துவ உலகிற்குத் தருகின்றார்.

1. பிரமசூத்திரம் சைவ சித்தாந்த மெய்யியலிற்குப் பிரமாண நூலாக அமைகின்றது.
2. சிவாத்துவித சைவபாடியம் சைவசித்தாந்த மெய்யியல் விளக்கத்திற்கு ஆதாரமாக இருக்கின்றது.
3. பிரமசூத்திரத்தில் வியாசரது கருத்து, சகுணப்பிரமமே முடிநிலையானது என்பதும் அந்தச் சகுணப்பிரமம் சக்தியோடு கூடிய சிவபெருமான் என்பதும் ஆகும்.
4. பிரமசூத்திரத்திற்கு சங்கரர் எழுதிய உரை சூத்திரத் தோடு எவ்விதத்திலும் தொடர்பற்றதாக, அதாவது சூத்திரம் வேறு, பாடியம் வேறாக அமைந்துள்ளது. பிரம சூத்திரத்தின் எண்ணிக்கை 545 ஆக இருக்க சங்கரர் சூத்திரங்கள் சிலவற்றைப் பிளந்தும், சில வற்றை இயற்றியும் 555 ஆக ஆக்கினார்.

பிரமசூத்திரம் சைவசித்தாந்த மெய்யியல் கருத்தை விளக்குகின்றது என்பதை நோக்கும்போது சிவபெருமானை சிறப்பித்துக்கூறும் உபநிடதங்களான ஈச, கேன, கட, பிரசினம், முண்டகம், மாண்டுக்கியம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருகதாரண்ணியகம், சுவேதாசுவதரம், காலாக்கினிருத்திரம், சிவசங்கற்பம் முதலியவற்றின் பொருளை ஆதாரமாகக் கொண்டே பாதராயணர் வேதாந்த சூத்திரத்தை உருவாக்கினார். இவை சைவசித்தாந்தத்திற்குப் பிரமாணமான உப நிடதங்கள். ஏகான்மவாத உபநிடதங்களிலும் சிறந் தவை. மேலும் வியாசரது 545 சூத்திரங்களும் சகுணப் பிரமத்தையே குறிப்பிடுகின்றன. நிர்க்குணப்பிரம வழிபாடு பற்றி எதுவும் கூறப்படவில்லை. இதற்கு மூலமான உபநிடதங்களிலும் நிர்க்குணபிரம வழிபாடு கூறப்பட வில்லை. சங்கராசாரியார் பிரமசூத்திரத்தில் நிர்க்குணபிரம வழிபாடு சொல்லப்பட்டதாக வலிந்து பொருள் கொண்டார். பிரமசூத்திர உபயலிங்காதிகரணத்தில் சிவபெருமானுக்கு உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் கூறப்படும் இரு வகை குணங்கள் சுருதியில் கூறப்பட்டுள்ளது. சத்தியம், ஞானம், அனந்தம், பிரமம் என்றும், சர்வஞ்ஞர், சர்வ வியாபகர் (சர்வகதர்) என்றும், சுருதியில் கூறப்படுவனவெல்லாம் உடன்பாட்டு முகத்தால் கூறப்பட்டவை. ஸ்தூலமன்று, அணுவன்று, நீட்டமன்று, குறுக்கமன்று எனவும், நிர்க்குணம், நிஷ்கிரியம், நிரஞ்சனம் எனவும் வருவது எதிர்மறை முகத்தால் கூறப்பட்டவை. உடன்பாட்டு குணங்களை மட்டும் கூறாது எதிர்மறை குணங்களைக் கூறியதற்குக் காரணம் உடன்பாட்டுக் குணங்கள் பிற பொருள்களால் குற்றம் ஒன்றும் பற்றாது தூயனவாய் நிற்பன என்பதை உறுதிப்படுத்துவதற்காகும். எனவே உடன்பாட்டு, எதிர்மறைக் குணங்களால் ஒரே சகுணப்பிரமமே வேதாந்த சூத்திரத்திற்கு ஆதாரமாக நின்ற உபநிடதங்களில் கூறப்பட்டது.[1] இவ்வாறு பிரமத்தை இரண்டு நிலையில்

கூறியதை ஏகான்மவாதிகள் பிரமத்தை நிர்க்குணம், சகுணம் என இரண்டாகப்பிரித்து தவறாகப் பொருள் கொண்டனர்.[1] உயர்ந்த சகுணப்பிரமம், நிர்க்குணப்பிரமம் எனக் கொள்ளும் பிரமமாகிய ஆன்மாவிற்குக் கீழ் என்று தாழ்த்தப்பட்டும், தாழ்ந்த ஆன்மாவானது நிர்க்குணப்பிரமம் என்று சிவபதிக்கு மேல் உயர்த்தப்பட்டும், உடன்பாட்டு நிலையிலும், எதிர்மறை நிலையிலும் கூறப்பட்ட பிரமம், இரண்டு பிரமமாகப் பிளக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதற்கு ஆதாரமாக ''மாண்டகுபதியைப் பசு வென்றும் பசுவைப் பதியென்றும் மதித்துனையிகழ்ந்தே'' என்றார் சிவஞான சுவாமிகள்.[1]

பிரமசூத்திரமானது, பிரமத்தை சகுணப்பிரமமாக தொடக்கத்திலும் (உபக்கிரமத்திலும்), அந்தப்பிரமத்தை உபாசிப்பவர்கள் எய்தும் பயன் பிரமலோகம் என்று முடிவிலும் கூறுவதால் உபக்கிரமமோ உபசங்காரலிங்கத்தினால் பிரமசூத்திரம் செய்த வியாசரின் கருத்து சகுணப்பிரமமே ஆகும்.[4]

ஏகான்மவாதிகளான சங்கரர் முதலானோர் நிர்க்குணப் பிரமத்தை வழிபட்டாலே மீளப்பிறப்பற்ற நிலை ஏற்படும் என்பார்கள். ஆனால் சகுணப்பிரமத்தை வழிபடுவோருக்கு எய்தும் பயன் பிரமலோகம் (சிவலோகம்) என்பதனால் பிரமலோகத்திலிருந்து ''புநராவர்த்தி'' இல்லை என்று சாந்தோக்கியத்தில் கூறிய பொருளே பிரமசூத்திரத்தில் ''மீளத்திரும்புதல் இல்லை மீளத்திரும்புதல் இல்லை'' எனக்கூறப்பட்டுள்ளது.[5]

அடுத்து, சங்கரர் தமது பிரமசூத்திர பாடியம் 1.1.2 இல் உலகத்தின் சிருஷ்டி, திதி, சங்காரங்களுக்கு காரணர் சர்வஞரும், சர்வ சக்திமானும் ஆகிய ஈஸ்வரர் என்று நியாயபூர்வமாகக் கூறப்பட்டது எனக் கூறுவதால் அவர் கருத்தும் பிரமம் சகுணப்பிரமமே என்பதாகும். மேலும், சங்கரர் பிரமசூத்திரத்தின் முதற் பத்து சூத்திரங்களும் சகுணப்பிரமம் பற்றி கூறப்பட்டுள்ளது என்பதை ஒப்புக் கொள்கின்றார். எனினும், எஞ்சிய சூத்திரங்களைத் தமக்கேற்றவாறு நிர்க்குணப்பிரமமே உயர்ந்தது எனப் பொருள் கொள்வதற்கு சூத்திரங்களை இரண்டாகப் பிளந்தும், சிலவற்றை நீக்கியும், புதிதாக எழுதியும் உள்ளார். சுருதிகளில் இறைவனுக்கு அநேக திவ்விய குணங்கள் கூறப்பட்டுள்ளன. அக்குணங்கள் அவருக்கு இல்லை எனக்கூறினால் அக்குணங்களைப்பற்றிக் கூறும் சுருதிகள் பொருளற்றனவாகிவிடும். இதனால் செந்திநாதையர் ''சூத்திரங்கள் ஒருபுறமிருக்க ஏகான்மவாதிகள் மற்றொரு புறமாகப் பாடியம் செய்தனர்'' எனக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தைப் பிரதிபலிப்பது போல யாழ்ப்பாணத்து ஞானி சைவசித்தாந்த சாதகர் பொ.கைலாசபதி மீண்டும் மீண்டும் கூறும் அதிமுக்கிய கருத்து சங்கரபாஷ்யம் வேறு பிரமசூத்திரம் வேறு என்பதும், சங்கரர் தமது கருத்துக்களை நூலாசிரியரின் கருத்துக்குமேல் திணித்துக் கூறிவிட்டார் என்பதுமாம். அதாவது ''நூலை வேறாகப் பார் உரையை வேறாகப் பார்'' என்பது பிரம்மசூத்திரத்தின் மீது தம் சொந்தக்கருத்தைக் கட்டிநடத்தி தம் கருத்தே பாதராயணர் கருத்து என உலகை நம்பச் செய்தார் என்பதே.[2]

பிரமசூத்திர சைவபாடியத்தில் சைவசித்தாந்தம் கூறும் 36 தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன. சங்கர், இராமா னுஜர் ஆகியோர் பிரகிருதி தத்துவம் வரைக்குமே குறிப்பிடு வர். எனவே ஏகான்மவாதிகளான சங்கரர் கூறும் கூடஸ்த பிரமம், இராமானுஜர் முதலான வைணவரின் நாராயணப்பிரமம் ஆகியன ஆன்ம தத்துவத்திற்கு மேற்பட்டிரா, சிவாத்துவிதிகளின் சிவதத்துவப்பிரமமே பிரமசூத்திரத்திற் காட்டப்பட்டது.[7] சிவன் பிரமசப்தத்தினால் அறியப்படுகின்றார். உபநிடதங்கள் சிவனைப் பிரமம் எனக் குறிப்பிடுகின்றன. ப்ரமம் என்பது ''பிரும்ஹ'' என்னுந் தாதுவினின்று பிறத்தலால், அது பிரும்மணம் என்னும் வளர்ச்சிவன்மையும், பிருகத்தவம் என்னும் மிக்க மேன்மையுமாகிய இரு குணங்களையுமுடையது. எனவே பிரமம் என்னும் மொழியே குணிப்பொருளாகக் காணப்படுகின்றமையினால், முக்கிய உபநிடதங்கள் தோறும் சிவபெருமானது திருநாமமாகக் காணப்படும் பிரமம் குணிப்பொருளேயாம். இதனை ''ஏகராகிய பரமேசுவரரே நாமபேதங்களினால் அறியப்படுகின்றார். மேன்மையினாலும் எங்கும் வியாபித்திருத்தலாலும் சிவபெருமானே பிரமம் எனப்படுவர் என்று பராக்கியை என்ற ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.' எனவும், "சச்சிதானந்த ரூபியாய், சேதனாசேதனப் பிரபஞ்சத்துக்கு வேறாய் வியாபகராயுள்ள சிவபெருமான் பிரமசப்தத்தினாற் கூறப் படு கின்றார்" என்று அஜிதாகமத்திலும் கூறப்படுவதனால் பிரம சப்தம் சிவபெருமானுக்குப் பெயராயிருத்தல் புலப்படும்.[8]

பிரமசூத்திரம் எனப்படும் வேதாந்த சூத்திரத்தின் தாற்பரியம் சகுண சிவத்திலேயாம். இதனை உலகத்திற்குப் பிரகடனம் செய்யும் பொருட்டே நீலகண்ட சிவாசாரியார் உத்தமமாகிய பாடியத்தை இயற்றினார் என்று அப்பைய தீட்சிதர் சிவார்க்கமணிதீபிகை ஆரம்பத்திலே கூறியிருக் கின்றார். சிவசக்தி குணங்களால் விசேடிக்கப்பட்ட விசிட்டாத் துவைதமே பிரமசூத்திர ஆசிரியரின் கருத்தாகும் என்பது இவர்தம் நிலைப்பாடு. விசிட்டாத்துவைதம் என்பது சிவாத்துவிதம். அகச்சமயங்கள் ஆறிலும் தலையாயதாய் பிரமலோகம், உன்மனாலோகம், பரலோகம், சுவர்க்க

லோகம் எனப்படும் சிதம்பரத்தின் மேலானது. இது தியான யோகம் எனப்படும் ஞானயோகத்தை, உள்ளவாறு முக்கிய வேதாந்தங்களுக்கும், சிவாகமங்களுக்கும் மாறுபடாது கூறுகின்றது. இதனை செந்திநாதையர் "சிவாகமங்களையும், சிவாலயங்களையும், ஆதிசைவர்களாகிய சிவத்துவிஜர்களையும் நிந்தனை செய்யும் இயற்கை பூண்ட மாயாவாதிகளுடைய வாயை அடக்குவதற்கு வேதோபப்பிருங்கண நெறியாலே சைவசமயத்தை ஸ்தாபனம் செய்வதற்கு வாய்த்த மகாபாசுபதாஸ்திரமாகிப் பெருமை படைத்தது இந்த நீலகண்ட சிவாசாரியாருடைய வைதிக சைவபாஷ்யமே" எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.[1]

மேலும், பிரமசூத்திரம், சிவாத்துவித சைவ பாடியம் என்பவற்றில் தகராகாசம் எனப்படும் திருச்சிற்றம்பலத்தையே முடிநிலைப் பொருளாகக் கூறப்பட்டுள்ளது. தகராகாசம் என்பதில் தகரம் என்பது சிறுமையையும் ஆகாசம் என்பது அம்பலத்தையும் உணர்த்தும். வடமொழியில் ஸ்ரீ என்பது தமிழில் திரு எனப்பட்டு, அது திருச்சிற்றம்பலத்தைக் குறித்து நின்றது. இதுவே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சைவசமயத்தை ஸ்தாபனம் செய்த சமயகுரவர்களின் கருத்துமாகும். இங்கு ஏகான்ம மாயாவாத மதமேனும், வைணவ மதமேனும் முடிநிலையாகக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு ஆதாரமாகச் செந்திநாதையர் ஔவையார் அருளிச் செய்த நல்வழியில் (பாடல் 40) வரும் இறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றார்.

''தேவர் குறளும் திரு நான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்றுணர்''

இதனது கருத்து திருவள்ளுவதேவர் திருக்குறளும், சிவபெருமானருளிய திருநான்மறை முடிவாகிய உபநிடதங்களும், வேதவியாசமுனிவர் அருளிய வேதாந்த சூத்திரமும் ஆகிய இவைகளும் திருச்சிற்றம்பலத்தையே முடிநிலையாகக் கொண்டது என்பதாகும். ''மலர்மிசை ஏகினான்'' என்ற குறளில் மலர் தகராகாசமாகிய சிதம்பரத்தைக் குறிக்கும். திருக்குறளின் உட்கிடக்கை வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தமே. திரு நான்மறை முடிவு திருச்சிற்றம்பலத்தில் திருநடம் செய்பவரே முடிநிலைப்பொருள் என்பதாகும். மூவர் தமிழ் திருச்சிற்றம்பலவாணரைப் பலபடப் பாடியுள்ளது என்பது வெளிப்படை. அதனால் தமிழ் வேதம் எனப்பட்டது. முனி மொழி என்பது வேதாந்த சூத்திரம், இதற்கு நீலகண்டர் எழுதிய சிவாத்துவித சைவபாடியத்தில் தகராகாசம் எனப்படும் திருச்சிற்றம்பலம் ஆனது பல அதிகரணங்களில் விரித்து விளக்கியுள்ளமை சிவார்க்கமணிதீபிகையால் நன்கு புலப்படும். இந்தத் தகரோபாசனையே பரவித்தைகளுள் பிரதானமாயிருக்கின்றது. சாந்தோக்கியத்திலும், கைவல்யத்திலும் இந்தத் தகரோபாசத்தை தியானிப்பவன் பரஞ்சோதி ரூபத்தை அடைந்து அதன் சொரூபமாய் விளங்குகின்றான் எனக் கூறப்படுகின்றது.[1]

திருக்கோவையார், எலும்பு ஆபரணம் அணிந்துள்ள இறைவர் சிற்றம்பலத் தில்லையிலே அமர்ந்துள்ளார். அவரை அருள் ஞானத்தால் வியாபித்து அணுகுதற்குக் கருதும் சீவன்முக்தர்தான் அத்துவிதக் கலப்பு என்ற பேரின்பத்தை அடைய முடியும். இதற்குச் சான்றாகப் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள ''அறிவின் எல்லையாய திருத்தில்லை எல்லை அமர்ந்து இறைஞ்சிப் பிறிவிலாத திருவடியைப் பெருகும் உள்ளத்தினைப் பெற்று'' (பாடல்: 3813) என்பது காட்டப்படுகின்றது.

வேதாந்தம் கூறும் சாதனை சைவ சாதனையே. சாதனை இல்லாத சாஸ்திர ஞானம் பயனற்றது. திருச்சதகம் சாதனையாளரின் கருவூலம் என எடுத்துக்காட்டி, "எம்பிரான் போற்றி செம்பிரான் போற்றி தில்லைச் சிற்றம்பலவா போற்றி" என்ற பாடல் மூலம் காட்டுகின்றார். திருமந்திரம் சாதனையின் உச்சத்திலுள்ள ஓர் இயல்பினை அணைந்தோர் தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

விம்மும் வெருவும் விழும் எழும்மெய்சோரும்
தம்மையும் தாம் அறியார்கள் சதுர் கெடும்
செம்மை சிறந்ததிரு அம்பலக்கூத்து
அம்மலர் பொற்பாதத்து அன்பு வைப்பார்கட்கே
(திருமந்திரம் : 2744)

சைவசித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றைக் கொண்டுள்ள சிவாத்துவித சைவபாடியத்தில் செந்தி நாதையர் அடிக்குறிப்பாக, சைவசித்தாந்த சாஸ்திர நூல்களிலிருந்தும், திருமுறைகளிலிருந்தும், திருக்குறளிலிருந்தும், திருவிளையாடற்புராணம், கந்த புராணம் முதலியவற்றிலிருந்தும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். சிவாத்துவித பாடியத்தின் ஆரம்பத்தில் சிவபெருமானுக்கு வணக்கம் சொல்லப்படுகின்றது. ''பதினெண் வித்தைகளுள் சுருதி மேலானது; அச்சுருதிகளுள் ஸ்ரீருத்திரம் மேலானது அவ்வுருத்திரத்துள்ளும் ஸ்ரீபஞ்சாட்சரம் மேலானது பஞ்சாட்சரத்துள்ளும் சிவ என்னும் ஈரெழுத்து மேலானது" என்ற அபியுக்தர் வாக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக கந்தபுராணத்தில், "சிவனெனுந்துணை

சீரெழுத்தினை" (கந்தபுராணம், உமைவருபடலம்:54) எனும் அடியை எடுத்துக்காட்டுகின்றார். "பின்னர் ஆகலின் பிரமத்தை அறிய ஆசை" - இங்கு பிரமம் என்பதற்கு "சிவனாரதும் சக்தியாரதும் சர்வான்மகத்துவமே பிரமம் என்பதே வெளிப்படை" என்ற கைலாச சம்கிதையையும், திருவாச கத்தின் ஆசைப்பத்தின் இரண்டாம் பாடலையும் எடுத்துக் காட்டியுள்ளார். வேதாந்தத் தியானமும் அதனால் தர்ம விசாரமும், பிரம விசாரமும் ஏற்படும் எனக் கூறப் படுகின்றது.

''எங்கிருந்து இதன் சிருஷ்டி முதலியன'' என்ற இரண் டாம் சூத்திரத்திற்கு தடஸ்த நிலையிலே சிவதத்துவத்தை அதிட்டித்து சிவபெருமான் செய்கின்ற பஞ்சகிருத்தியம் கூறப்பட்டுள்ளது. மேலும், இறைவனது குணங்களான சர்வஞ்ஞத்துவம் (முற்றறிவு), நித்தியதிருப்தித்துவம் (வரம்பிலின்பமுடைமை), அநாதிபோதம் (இயல்பாகவே பாசங்க ளிலிருந்து நீங்குதல்), சுவதந்திரத்துவம் (தன்வயமுடைமை), அலுப்தசத்தித்துவம் (பேரரு ளுடைமை), அனந்தகசத்தித்துவம் (முடிவிலாற் றலு டைமை) என்பவையே சர்வஞ்ஞாதி குணங்கள் எனச் சொல்லப்பட்டன. சிவபெருமானது இருதயம் முற்றறி வையும், சிரசு வரம்பிலின்பத்தையும், சிகை இயல் பாகவே பாசங்களிலிருந்து நீங்குதலையும், கவசம் தன்வயமுடைமையையும், கண் முடிவிலாற் றலுடைமை யையும், அஸ்திரம் பேரருளுடைமையையும் உணர்த் துகின்றது என்ற சோமசம்புபத்ததி வியாக்கி யானத்தை எடுத்துக்காட்டினார். சிவபெருமானது அஷ்ட நாமங்களான பவர், சர்வர், ஈசானர், பசுபதி, உருத்திரர், உக்கிரர், பீமர், மகாதேவர் முதலியவை விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

பதியாகிய இறைவனது உண்மையை அறிவதற்கு சுருதிப்பிரமாணம் தான் ஒரே வழி என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது. "வேதாந்த சாஸ்திரம் ஒன்றினாலே பெறப்படுபவரும், அந்த வேதாந்தப் பிரமாணம் ஒன்றி னாலேயே தாபிக்கப்பாலதும், பரப்பிரமம் சிவபெருமான் என சித்தமாயிற்று." எனக் காட்டப்பட்டுள்ளது. எனி னும், சிவஞான முனிவர் சிவஞானபோத முதலாம் சூத் திரத்திற்கு உரை எழுதும் போது, மந்த புத்தி உடை யவர்களுக்காக அனுமானப் பிரமாணத்தினால் பதி உண்மையை நிறுவ முற்பட்டு, ஈழத்து சித்தாந்த அறிஞர் களால் விமர்சிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அனுமா னத்தினால் ஒரு கர்த்தா உண்டென்று கொண்டாலும், அக்கர்த்தா கருமம் முதலியவற்றினால் தொடக்கு உண்ட வனாக அறியப் படுவான் என நீலகண்டர் எடுத்துக் காட்டி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவாத்துவித சைவபாடியத்தில் ''பிரமம் சேதனா சேதனத்துள்ளே பிரவேசித்து சத்தும் (பசுவும்), தியத்தும் (பாசமும்) ஆயினர்'' என்று தொடங்கும் சுருதிப்பிரமாணம், பல்வகைத்தாய சேதனா சேதன பிரபஞ்ச ரூபமாக மிகுதியும் (ஆயினார்) பரிணமித்தார்'' என்று கூறுகின்றது. இங்கு பரிணாமம் என்பது, பால் தயிராதல், மண் கடமாதல் என்பது போலப் பிரமத்திலிருந்து எல்லாப் பொருள்களும் பரிணமித்தன என்ற கருத்தில் காணப்படுகின்றது. பரி ணாமம் என்னும் மொழி உபநிடதங்களில் இல்லை அவ்வாறிருக்கவும், சூத்திரகாரரால் 1:4:27 இல் இப்பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இப்பரிணாமத்திற்காக பாடியக் காரரால் எடுத்துக்காட்டப்பட்ட தைத்திரிய உபநிடதத்தில் காணப்படும் "அபவத்" என்பதற்கு "ஆயினார்" "ஆனார்" என்பது பொருள். இது "உலகானாய் எனவும், "இரு நிலனாய்த்தீயாகி" எனவும் வரும் இடங்களில் காணலாம். "ஆனாய்", "ஆகி" என்றவைகளுக்கு எந்தப்பொருளைச் சைவசித்தாந்திகள் கொள்கின்றார்களோ அந்தப்பொருள் தான் பரிணாமத்திற்குப் பொருளாகக் கொள்ளத்தக்கது என்பது செந்தி நாதையர் நிலைப்பாடு. இப்பரிணாமத்தினால் சிவபெருமானுக்கு களங்கம் எதுவுமில்லை என்று உணர்த்துவதற்கு அபூர்வ பரிணாமம் எனப் பாடியக்காரர் குறிப்பிட்டார். இவ்வாறு பிரமசூத்திரத்துக்கு சைவசித்தாந்த அடிப்படையில் பொருள் காண்பதற்கு காரணம் பிரமசூத்திர ஆசிரியர் வியாசர் சைவராகவும், அவர் தம் நூல் சிவ பரத்துவமாக இருப்பது மாம். சிவபுராணத்தில் வரும் கை லாசசம்கிதை பிரமசூத்தி ரத்தின் முதலாம் சூத்திரத்தை எடுத்துக் காட்டுவதும் இக் கருத்துப் பற்றியதேயாகும். பொ. கைலாசபதியின் சிந்தனையின் புத்திவிருத்திக் கட்டமைப்பில் வியாசர் நிற்கும் தளம் காமம். முதல் வகுப்பார், ஐந்து இடம் மேலே எட்டுவார். அது சித்தாந்தம். வியாசருக்கு மிகத்தெளிவாகத் தெரியும். அதனால்தான் அவரது பிரம்மசூத்திரம் என்ற உத்தர மீமாம்சை பரிபூரணமாக சித்தாந்தத்தைக் கூறுவது என்பது, கைலாசபதி அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.[2]

இப் பரிணாமம் மகேஸ்வரருக்கு அவயவமாகவும், அம்சமாகவும் உள்ள சிற்சக்தியே, போக நிலையில் புருடன் எனப்பெயர் கொண்டு சகல உலகத்தையும் வியா பித்துக் கொண்டிருக்கின்றது எனக் கூறப்படுகின்றது. இதனால் சகல பூதங்களும், பிரகிருதியும், பராசக்தி எனப்படும் உமையோடு இசைந்த சிவபெருமானேயாம். எனவே பரப்பிரமமே உலகிற்கு உபாதான காரணமும் நிமித்த காரணமுமாம் என்பது சிவாத்துவித நிலைப்பாடு. சைவசித்தாந்தம் சிவபெருமான் உலகிற்கு நிமித்தக் காரணர் என்றும், மாயை முதற் காரணம் என்றும்

கூறும். இவ்வகை முரண்பாட்டிற்குச் சமாதானம்; உபநிடதங்களும், இவற்றை ஆதாரமாகக்கொண்டு பிறந்த பிரமசூத்திரமும் தியானயோகத்தையே இறுதியாகக்கூறி நிற்பனவாகும். இந்த தியான யோகத்திலே பரிக்கிரக சக்தியாகிய சுத்தமாயைக்கும், பராசக்திக்கும் இடம் ஒன்றாயிருந்தமையால் யோகஸ்தானத்து உபநிடதங்கள் அந் நிலைக்கேற்ப அவற்றைக் கூறியமை பெறப்படும். அதுபற்றி குற்றமாகக் கொள்ளப்படாது என்பது சித்தாந்த நிலைப்பாடு.

நீலகண்ட பாடியப் பதியதிகரணத்தில் சிவாகமங்களில் சில பிரமப்பொருள் உலகத்திற்கு நிமித்த காரணம் மட்டுமே என்று கூறும். இந்த அதிகரணம் அந்தக் கொள்கையை மறுப்பதற்கு எழுந்தது என்று சிலர் கூறுவர். அது பொருந்தாது என எடுத்துக்காட்டும் நீலகண்டர், ''யாம் வேதத்திற்குஞ் சிவாகமத்திற்கும் வேற்றுமை கண்டிலேம்: சிவனாற் செய்யப்படுதலின் வேதமுஞ் சிவாகமம் என வழுங்கப்படும்: ஆதலாற் சிவாகமம் மூன்று வருணத்துக்கே உரியதாயதும் நான்கு வருணத்துக்கே உரியதாயதும் என இரு வகைப்படும். அவற்றுள், முன்னையது வேதம் எனவும், பின்னையது சிவாகமம் எனவும் வழங்கப்பட்டன. இவ்விரண்டுஞ் செய்த கருத்தா சிவன் ஒருவனேயாம்: இவ்வாறு சுருதியினும் புராணங்களினுஞ் சிவாக மங்களினுங் கூறப்பட்டது:'' எனக் குறிப்பிட்டிருத்தல் காண லாம்.[3] மேலும் அந்த அதிகரணத்தில் பஞ்சப்பிரமம், பிரண வம், பஞ்சாக்கரம், பிராசாதம் முதலிய மந்திரங்களும், பதி, பசு, பாச முதலிய பொருள் வழக்கமும், திருநீற்றின் உத்தூளனம், திரிபுண்டரம், உருத்திராக்கந்தரித்தல், சிவலிங்கபூசை முதலிய தருமங்களும், பிறவும் வேதம், சிவாகம் இரண்டிலும் கூறப்பட்டுள்ளது. அவ்விரண்டிற்கும் பொருள் ஒன்றே எனக் கூறப்பட்டுள்ளது. அப்பையதீட்சித சுவாமிகள் இதனை விரித்துச் சிவார்க்கமணிதீபிகையிலும், சிவதத்துவ விவேகம் முதலான நூல்களிலும் சிவாகமங் களுக்கு பிரமாணம் காட்டியுள்ளமை காணலாம். சிவஞான முனிவர் தனது சிவஞானபோத பாடியத்தில் வேதசை வாகமப் பிரமாணங்கள் பற்றிய விளக்கத்திற்கு இதனை எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கது. சைவசித்தாந்த கருத்துப் படி வேதத்திற்கும் ஆகமத்திற்கும் பேதமில்லை என்பதாகும்.

மேலும், பிரமசூத்திரம் 157 இல் "படம் போலவும்" எனக்குறிக்கப்பட்டுள்ளது. சுருக்கும் போது சூக்கும ரூப மாக இருந்த படமானது, விரிக்கும்போது அவ்வாறு மகா படமாய் குடிசை ரூபமான காரியமாதல் போல பிரம மும் காரண காரிய ரூபமாகின்றது. இப்பிரமசூத்திர நீல கண்டபாஷ்யத்திலிருந்தே "படம் குடிலாம்" என்ற உவமை யை எடுத்து, ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் சித்தியாரில் சுத்த மாயைக்கு பரிணாமம் கூறும்போது ''புகழ்ந்திடும் விருத்தியாகும் படம் குடிலானாற்போல'' (1:24) என்றார்.

பிரமசூத்திரம் "ஆரம்பணாதிகரணம்" பன்னிரண்டு சுருதிப்பிரமாணங்களைச் சான்று காட்டி முப்பொருள் உண்மையைக் கூறுகின்றது. "ஆயின் (காரணம்) சிரேட்டம் பேதங் கூறப்படலான்." காரியமும் காரணமும் வேறுபாடு அற்றனவாயினும் ஒரு நிலையில் வேறுபாடு உள்ளது என்பதை நீலகண்டர் ஏற்கின்றார். இது பாஸ்கரரின் பேதாபேதவாதக் கொள்கை போன்று அமைந்துள்ளது. "வித்தையையும் (ஆன்மாவையும்) அவித்தையையும் (அசேதனத்தையும்) ஆளும் ஈசுரர் வேறு" எனவும், "மாயையைப் பிரகிருதி என்றும், மாயை உடையாரை மகேசர் என்றும் அறிக" எனவும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து சிவபெருமான் இந்த உலகத்தை சிருஷ்டிக் கின்றார். அதிலே ஆன்மா மாயையால் கட்டுண்டது. இவ்வாறு கூறப்பட்ட பன்னிரு சுருதிகளும் இவை போன்ற ஏனைய அளவில்லா சுருதிகளும், ஆன்மாவும் பரமான் மாவும் வேறு என்றும், நித்திய பொருட்கள் என்றும், இதிகாச புராண சிவாகமங்களுக்கு மாறுபடாவண்ணம் கூறிய விடத்து இவற்றை ஆதாரமாகக்கொண்டு உருவாகிய பிரமசூத்திரத்திலும், முக்கிய உபநிடதங்களிலும் இல்லாத கடாகாய, மகாகாய கருத்துப் புகட்டி ஏகான்மவாதிகள் ஆன்மாவைப் பொய் என்று உரைத்தனர்.

நீலகண்ட சிவாசாரியார் சிவாத்துவித சைவபாடியத்தில் மத்துவரின் துவிதம் (பேதம்), சங்கரரின் ஏகான்மம் (அபேதம்), இராமனுஜரின் துவிதாத்துவிதம் (பேதாபேதம்) என்பன மறுக்கப்பட்டுள்ளன. உமாபதி சிவாசாரியாரால் சிவப்பிரகாசத்தில் ''புறச்சமயத்தவர்க்கு இருளாய்'' எனத் தொடங்கும் பாடலில் ''பொற்பணிபோல் அபேதப் பிறப்பிலதாய் இருள்வெளிபோல் பேதமுஞ் சொற்பொருள் போல் பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன அறத்தினால் விளைவதாய்'' எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

## 3. ஆய்வு முடிவு

இவ்வாய்வின் பயனாக பின்வரும் விடயங்கள் அறியப்படு கின்றன. பிரமசூத்திரம் பரிசுத்தமான சைவசித்தாந்த நூல். இதற்குச் சங்கரர் முதலானோர் எழுதிய உரையிலும், ஸ்ரீ நீலகண்டர் எழுதிய உரை மிகப் பழமையானதாக உள்ளது. இது சிவாத்துவிதக் கொள்கையை விளக்குவதாயினும், சைவசித்தாந்தப் பொருளை உட்கொண்டதாக, சித்தாந்த சாஸ்திரநூல்களின் உருவாக்கத்திற்கு ஏதுவான பின்ன

ணியைக் கொண்டதாக இருக்கின்றது. இந்திய மரபில் வேதத்தையும் சிவாகமத்தையும் இணைத்துக் காட்டும் மிகப்பழைய நூலும் இதுவே. பிரமசூத்திரத்தின் முடி நிலையான பிரமப்பொருள் சகுணப்பிரமம் என்பது இதன் வழி பெறப்படும்.

## 4. முடிவுரை

சைவசித்தாந்த நோக்கில் சிவாத்துவிதபாடியம் என்ற இவ்வாய்வின் வழி சிவாத்துவிதபாடியத்தின் மூலநூலான பிரமசூத்திரம், அதற்கு மூலமான உபநிடதங்கள் மற்றும் பிரமசூத்திரத்திற்கு எழுதப்பட்ட பல்வகைத்தன்மையான உரைகள் என்பன எடுத்துக்காட்டப்பட்டு, அவற்றுள் சிவாத்துவித சைவபாடியம், செந்திநாதையர் மொழி பெயர்ப்பானது சைவசித்தாந்தக் கொள்கையுடன் இணைத்து விளக்கப்பட்டுள்ளது. பிரமசூத்திரத்தின் முடிநிலைப் பொருளான சகுணப்பிரமத்தை இரண்டாக பிளந்து, சங்கரர் முதலானோர் தவறான பொருள் கொண்டனர் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. மேலும் வேதசிவாகமத் தொடர்பு, பரிணாமம் பற்றிய விளக்கம், படம் குடிலாதல், நிமித்த உபதான காரணங்கள் பற்றியும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## உசாத்துணை நூல்கள்


[1] செந்திநாதையர், காசிவாசி, "பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்", தெய்வச்சேக்கிழார் சைவசித்தாந்த பாடசாலை, தஞ்சாவூர், 2005.

[2] மா.வேதநாதன், "பொ.கைலாசபதி அவர்களின் தேர்ந் தெடுத்த சிந்தனைகள்", கைலாசபதி நூற்றாண்டு விழாக்குழு வெளியீடு, யாழ்ப்பாணம்.

[3] சிவஞானமுனிவர், "சிவஞான பாடியம்", சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 2008.

[4] செந்திநாதையர், "ஸ்ரீ காசிவாசி, சைவ வேதாந்தம், தெய்வச்சேக்கிழார் சைவசித்தாந்த பாடசாலை", தஞ்சாவூர், மீள்பதிப்பு - 2009.

- செந்திநாதையர், காசிவாசி, "பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்", தெய்வச்சேக்கிழார் சைவசித்தாந்த பாடசாலை, தஞ்சாவூர், இண்டாம் பதிப்பு - 2005.
- முத்தப்பன்.பழ, "சைவசித்தாந்த சாத்திரங்கள், உமா பதிப்பகம்", சென்னை, 2009.
- சந்திரசேகரம்.பொ. சைவசித்தாந்த "மெய்யியலிற்கு காசிவாசி செந்திநாதையரின் பங்களிப்பு", நான்காவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டுக் கருத்தரங்க மலர், தொகுதி-3, தருமபுர ஆதீனம், தருமபுரம், 2008.
- கந்தசாமி.சோ.ந., "இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி-2", மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2003.
- சிவஞானமுனிவர், சிவஞான பாடியம், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 2008.
- அருணைவடிவேல் முதலியார்.சி., சிவஞானபோத மாபாடியம் - பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல் கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.
- திருவிளங்கம்.மு., "சிவஞான சித்தியார் சுபக்கம், சிவதொண்டன் சபை", யாழ்ப்பாணம், மூன்றாம் பதிப்பு, 2010.
- "பொ.கைலாசபதி அவர்களின் தேர்ந்தெடுத்த சிந்தனை கள்", கைலாசபதி நூற்றாண்டுவிழாக்குழு வெளியீடு, யாழ்ப்பாணம், 2009.